**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.23/2024 தேதி- 30.06.2026
(PW.2) –டென்னிஸ்

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

1. என்னுடைய வீடு வழக்கு பட்டிகை சொத்திலிருந்து எவ்வளவு தொலைவில் அமைந்திருக்கிறது என்றால் 3 கி.மீ தொலைவில் அமைந்திருக்கிறது. நானும், இந்த வழக்கின் பிரதிவாதிகளும் உறவினர்கள் என்றால் சரிதான். என்ன முறையில் உறவினர்கள் என்றால் நெருங்கிய உறவினர்கள் இல்லை. என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். பிரதிவாதிகளின் குடும்பத்தை பற்றி விவரங்கள் முழுமையாக எனக்கு தெரியும் என்றால் ஓரளவிற்கு தெரியும்.

2. 1 முதல் 3 வரையுள்ள பிரதிவாதிகளுக்கு எவ்வளவு சொத்து உண்டு என்று தெரியுமா என்றால் சுமார் 40 சென்ட் சொத்திருக்கும். சர்வே எண் என்ன என்று தெரியுமா என்றால் சர்வே எண்.199/10, காட்டாத்துறை கிராமம் ஆகும். நான் சொல்வது போல் அப்படியொரு சொத்து இல்லை என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கின் வாதியின் கணவரை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 10 ஆண்டுகளாக தெரியும்.

3. அவருடைய தொழில் என்ன என்றால் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார். சுமார் எத்தனை வருடங்களாக வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார் என்றால் 20 வருடங்கள் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார். கடைசியாக எப்போது வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்றால் 2020 வரை வெளிநாட்டில் இருந்தார். அவருடைய பாஸ்போர்ட்டை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் மது அருந்தும் பழக்கமுடையவரா என்றால் இல்லை. இந்த வழக்கின் வாதியின் கணவர் குடிக்காரரர் என்று எப்படி எனக்கு தெரியும் என்றால் நான் சென்று வரும் வழியில் மது மயக்கத்தில் விழுந்து கிடப்பார்.

4. என் மனைவி இப்போது எங்கு உள்ளார் என்றால் குட்டகுழி என்ற ஊரிலுள்ள என் வீட்டில் உள்ளார். என் மனைவி என்னை விட்டு சென்றுவிட்டார் என்றாலும், 20 ஆண்டுகளாக தனியாக தான் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் வாதியின் கணவருக்கு என்ன நோய் என்றால் இரத்த புற்று நோயாகும். மேற்படி விவரத்தை என்னிடத்தில் யார் சொன்னார்கள் என்றால் தெரியாது. வாதியின் கணவருக்கு புற்று நோய் உள்ளதை காண்பிக்கக்கூடிய ஆவணம் ஏதாவது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

5. வாதியின் கணவருக்கு எங்கெல்லாம் சிகிச்சை நடைபெற்றது என்பதை குறித்து தெரியுமா என்றால் கிம்ஸ் மருத்துவமனை, ஆறுமுகம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பார்கள். இந்த வழக்கின் வாதியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 10 வருடங்களாக தெரியும். வாதி அவருடைய கணவரை விட்டு எப்போது சென்றார் என்றால் அவருடைய கணவரின் இறப்பிற்கு பிறகு சென்றுவிட்டார்.

6. ஸ்டெர்லின் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். ஸ்டெர்லின் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் இந்த வழக்கில் வாதி தன்னுடைய மனைவி என்று குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கின் வாதி ஸ்டெர்லின் தனது கணவர் என்று காவல் நிலைய விசாரணையின் போது வாக்குமூலம் அளித்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு வாதியை பற்றியோ, பிரதிவாதிகளை பற்றியோ எதுவும் தெரியாமல் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்க தல்ல என்றால் சரியல்ல.

<u>4 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>

7. இந்த வழக்கில் சாட்சி அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் அளிக்கப்படவில்லை என்றால் சரிதான். வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் வாதியினுடைய வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதாகும்.

8. மேற்படி வாக்குமூலம் தயார் செய்யப்பட்டு இருந்ததில் நான் கையொப்பம் போட்டேனா என்றால் நான் அலுவலகத்திற்கு சென்று வழக்கறிஞரிடம் தகவல் தெரிவித்து தயார் செய்யப்பட்டதாகும், அதன் பிறகு கையொப்பம் செய்தேன். இந்த வழக்கின் 4 வது பிரதிவாதியை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவருடைய பூர்வீகம் எங்கு உள்ளது என்றால் நினைவில் இல்லை. அவர் என்ன தொழில்செய்து வருகிறார் என்றால் அவர் மருத்துவராக வேலை செய்து வருகிறார்.

9. 4 வது பிரதிவாதியின் சொத்தை விலைக்கு வாங்கும் போது நான் உடன் இருக்கவுமில்லை, சாட்சியாக கையொப்பமிடவுமில்லை என்றால் சரிதான். சொத்தை விலைக்கு வாங்கும் போது எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்றும், எங்கு வைத்து ஆவணம் ஏற்படுத்தப்பட்டது போன்ற எந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சொத்தை விற்ற பிறகு வாதியின் கணவர் ஒரு இரப்பர் கடை நடத்தினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நினைவில் இல்லை.

10. கிரய ஆவணம் ஏற்படுத்தி எத்தனை வருடங்களுக்கு பிறகு வாதியின் கணவர் இறந்து போனார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 4 வது பிரதிவாதியின் மருத்துவர் என்றாலும், மற்ற குடும்பத்தினரும் மருத்துவர்கள் என்றாலும், பொருளாதாரத்தில் நல்ல நிலையில் தான் உள்ளார் என்றால் சரிதான். இதை தவிர்த்து வேறு சில சொத்துக்கள் 4 வது பிரதிவாதி வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் வழக்கு B பட்டிகை சொத்தை விற்றதை பற்றி எனக்கு எந்த தகவலும் தெரியாது என்றாலும், நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.